DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| Sworn Statement of Complainant | Crime No.: | Station : |
| | C.MP. 2905/2024 | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | குமார இரவிக்குமார் | Caste | |
| Father's Name | குமாரசாமிக் கவுண்டர் | Calling | விவசாயம் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 63 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 31.01.2025 |

**பிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறேன்.**

1. 1ம் எதிரி எனது அண்ணன், 2ம் எதிரி எனது அண்ணனின் மனைவி. என்னுடன் பிறந்தவர்கள் நான்கு அக்கா, மூன்று அண்ணன்கள். 1983ம் ஆண்டு எங்களது குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சத்தியமங்கலத்திலுள்ள வரதம்பாளையம் க.சா.எண்.314/1, 314/3 ஆகிய புலங்களிலுள்ள மொத்தம் 12 ஏக்கர் பூமியை நானும், 1ம் எதிரியும், எனது அம்மா ராஜாம்மா, திருமணமாகாத சகோதரி சகுந்தலா ஆகியோருக்கும் எங்களுக்குள் பாகம் பிரித்து ஆவணம் பதிவு செய்துகொண்டோம். எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தைப் பொறுத்து அவரது வாழ்நாள் அனுபவத்திற்குப் பிறகு அதை சரிசமமாக நானும், 1ம் எதிரியும் எங்களுக்குள் பிரித்துக்கொள்ள வேண்டும் என்று மேற்படி ஆவணத்தில் வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது.

2. மேற்படி சொத்தில் A schedule 2 ஏக்கர் பூமியை எனது அம்மா ராஜாம்மாவுக்கு , C schedule 4.35 ஏக்கர் பூமியும், 6 சென்ட் வீட்டு இடமும் மொத்தம் 4.41 ஏக்கர் எனது சகோதரரான 1ம் எதிரிக்கும், D schedule 3-1/2 ஏக்கர் பூமியும், 9 சென்ட் வீட்டு இடமும் மொத்தம் சேர்த்து 3.59 ஏக்கர் எனக்கும், E schedule 2 ஏக்கர் பூமியை எனது சகோதரி சகுந்தலாவுக்கும் மேற்படி ஆவணத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனது அம்மாவுக்கு மேற்படி ஆவணத்தில் 2 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டிருந்தாலும், எனது தாயார் இருக்கும்போது

நானும் எனது அண்ணனான 1ம் எதிரியும் ஆளுக்கு 1 ஏக்கர் வாய்மொழியாகப் பிரித்து விவசாயம் செய்து குத்தகைப் பணத்தை எனது தாயாருக்கு நாங்கள் இருவருமே செலுத்தி வந்தோம்.

3. எனது சகோதரிக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்ட 2 ஏக்கர் பூமி எனது சகோதரி சகுந்தலா சுவாதீனம் எடுத்துக்கொண்டார். மீதமுள்ள 10 ஏக்கர் பூமியை சர்வே மூலமாக அளக்காமல் எங்களுக்குள் பிரித்து விவசாயம் செய்து வந்தோம். 1998–ல் எனது அம்மா அவருக்கு வாழ்நாள் பாத்தியமாக ஒதுக்கப்பட்டிருந்த 2 ஏக்கர் பூமியில் அரை ஏக்கர் பூமியை வெளி நபர்களான 7 நபர்களுக்கு ஒரே கிரையமாக விற்பனை செய்துள்ளார். வாழ்நாள் பாத்தியமாக ஒரு சொத்து ஒரு பெண்ணுக்கு நிபந்தனை மூலமாக ஒதுக்கப்பட்டிருந்ததாலும் அவருக்கு அதில் முழு உரிமை இருப்பதாக சட்டம் இருப்பதால் அதைப் பொறுத்து நானும், 1ம் எதிரியும் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. எனது கட்டுப்பாட்டிலிருந்த என் அம்மாவின் ஒரு ஏக்கர் பூமியில்தான் மேற்படி 50 சென்ட் பூமியை 3ம் நபர்களுக்கு என் தாயார் விற்பனை செய்திருந்தார். எங்களுக்குள் சர்வேயர் வைத்து அளவீடு செய்யும்போது அதைப் பொறுத்து பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்தோம்.

4. 2006–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் எனது அம்மா இறந்துவிட்டார். 2009–ம் ஆண்டு சர்வேயர் வைத்து அளப்பதற்காக நான் முயற்சி செய்தபோது 1ம் எதிரி அதற்கு முன்வராமல் மறுப்பு தெரிவித்தார். பாகப்பிரிவினை ஆவணத்தின்படி எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த சொத்தின் எல்லைகளை நிர்ணயம் செய்துகொடுப்பதற்காக நானும், எனது சகோதரி சகுந்தாலாவும் 1ம் எதிரி சந்திரசேகர் மீது அசல் வழக்கு ஒன்றை சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம். அப்போது 1ம் எதிரியும், அவரது மனைவியுமான 2ம் எதிரியும் 1ம் எதிரி விவசாயம் செய்து வந்த பூமி சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று கோரி என்மீதும், எனது சகோதரி சகுந்தலா மீதும் அசல் வழக்கு ஒன்றை சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

5. மேற்படி எதிரிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் ஒரு ஆவணம் தாக்கல் செய்திருந்தார். அந்த ஆவணத்தைப் பார்வையிடும்போது 2005ம் ஆண்டு க.சா.எண்.314/1

புலத்தில் தனக்கு 4.70 ஏக்கர் பூமி இருப்பதாகவும், அதில் 30 சென்ட் நிலத்தை தனது மனைவிக்கு தானம் செய்து கொடுப்பதாக எழுதி பத்திரப்பதிவு மேற்கொண்டுள்ளது தெரியவந்தது. ஆனால் 1983–ல் நடந்த பாகப்பிரிவினையின்படி க.சா.எண்.314/3ல்தான் 4.41 ஏக்கர் 1ம் எதிரிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் மேற்படி தானசெட்டில்மென்ட் ஆவணத்தில் க.சா.எண்.314/1–ல் தனக்கு 4.70 ஏக்கர் பூமி இருப்பதாக கூறி அதில் 30 சென்ட் பூமியை 2ம் எதிரிக்கு தான செட்டில்மென்ட் ஆவணத்தை போலியாக எழுதி பதிவு செய்துள்ளனர். மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிகள் தரப்பில் வழக்கு தாக்கல் செய்த பின்புதான் தெரியவந்தது.

6. மேற்படி போலி ஆவணத்தின் மூலமாக எதிரிகள் இருவரும் சேர்ந்து பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தை சட்டத்திற்குப் புறம்பாக சுவாதீனம் எடுத்து ஆக்கிரமித்துக்கொண்டார்கள். 2ம் எதிரியில் பெயரிலுள்ள தான செட்டில்மென்ட் ஆவணத்தை சத்தியமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் தனக்கு 3.50 ஏக்கர் பூமி க.ச.எண்.314/1–ல் இருப்பதாகக் கூறி கிராம நிர்வாக அலுவலரின் சான்றை போலியாக தயாரித்து மேற்படி ஆவணத்தை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து ரூ.3,50,000/–யைக் கடன் பெற்றுள்ளனர். அரசின் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட போது மேற்படி கடனும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

7. என்னுடைய மற்றொரு சகோதரரான மகாதேவன் என்பவரின் மகன் குமாரராஜா சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து சத்தியமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 2ம் எதிரி செய்த ஊழலைப் பொறுத்து விசாரிப்பதற்காக உத்தரவு பெற்றுள்ளார். மேற்படி விசாரணையின் முடிவில் 2ம் எதிரி க.ச.எண்.314/1–ல் அதிக அளவில் பூமி இருப்பதாக பொய்யாக தெரிவித்துள்ளது தெரியவந்ததால் அதன் நடவடிக்கையின் பேரில் 2ம் எதிரி மேற்படி கடன் தொகையை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு செலுத்தியுள்ளனர். கோபி கோட்டாட்சியர் நடத்திய விசாரணையில் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் வழங்கியதாக சொல்லப்படும் சான்றானது சத்தியமங்கலம் குருப் கிராம நிர்வாக அலுவலர் அவரால் மேற்படி சான்று வழங்கப்படவில்லை என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

8. அதன் தொடர்ச்சியாக 2-ம் எதிரியின் மீது நடவடிக்கைக் எடுக்கக்கோரி கோட்டாட்சியர் சத்தியமங்கலம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு உத்தரவிட்டு அது நிலுவையில் இருந்து வருகிறது. உரிமையில் நீதிமன்றத்தில் எங்களால் தாக்கல் செய்யப்பட்ட எல்லை நிர்ணயம் செய்யக் கோரிய வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எதிரிகள் எங்கள் மீது தாக்கல் செய்திருந்த நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரிய வழக்கானது அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. நாங்கள் செய்த வழக்கின் தீர்ப்பிற்கெதிராக சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்து அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பிற்கெதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த 2வது மேல்முறையீடு வழக்கு எனக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

9. இதற்கிடையில் 2ம் எதிரி அவருக்கு சாதகமாக உரிமையில் நீதிமன்றத்திலும், சார்பு நீதிமன்றத்திலும் பெறப்பட்ட உத்தரவை அமுல்படுத்துவதற்காக வருவாய்த்துறையில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். என்னுடைய சொத்தை அபகரிப்பதற்காக எதிரிகள் இருவரும் சேர்ந்து போலியாக ஆவணங்கள் தயார் செய்துள்ளனர். எனது தாயார் இறந்தபிறகு 1ம் எதிரிக்கு 5.16 ஏக்கர் பூமி இருந்தாலும், அவர் அதை மறைத்து 4.41 ஏக்கர் பூமி மட்டுமே தனக்கு இருப்பதாகக் கூறி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் சிறு விவசாயியாக தன்னைக் காட்டிக்கொண்டுதான் 1ம் எதிரியும், மேற்படி வங்கியில் ரூ.4,50,000/- கடன் பெற்று விவசாயக் கடன் தள்ளுபடி சமயத்தில் மேற்படி கடனும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற ரிட் மனு உத்தரவுப்படி நடந்ததப்பட்ட விசாரணையில் மேற்படி விபரங்களும் தெரியவந்ததால் 1ம் எதிரியும், அவர் வாங்கியிருந்த கடனை கூட்டுறவு வங்கியில் திரும்ப செலுத்திவிட்டார். எனது அம்மா உயிருடன் இருக்கும்போதே 2005ல் 1ம் எதிரி 2ம் எதிரிக்கு போலியாக தான செட்டில்மென்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, 1, 2 எதிரிகள் சேர்ந்து மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்தி என்னுடைய சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதுடன் எனக்கு தொடர்ந்து தொல்லைகளை ஏற்படுத்தி மன உளைச்சல் ஏற்படுத்தி வருகிறார்கள். எனவே, எதிரிகளின் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.